
*ISSN No. : XXXXXXXXX* *அவையம் 1 (2017) p.no. 49 - 59*

புதிய அவையம்



SACRED HEART RESEARCH PUBLICATIONS

# மணிமேகலையில் சொல்லாக்கச் சிந்தனைகள்

**முனைவர் தி.அ. இரமேஷ்**

***உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,***
***தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர்-635 601.***

***கட்டுரை பெறப்பட்டது: 20.12.2016*** ***ஏற்கப்பட்டது: 05.05.2017***

தமிழ்மொழி காலந்தோறும் எழுத்து நிலையிலும் வழக்கு நிலையிலும் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வந்துள்ளது. அதைச் சங்க இலக்கியங்கள் தொடங்கி தற்கால இலக்கியங்கள் வரை, மொழிப்பயன்பாட்டு நிலையில் வளர்ச்சி பெற்றுள்ளதைப் போன்று, வட்டாரம் சார்ந்து மக்கள் மொழியைப் பயன்படுத்தும் தன்மைகளைக் கொண்டு அறியலாம். இப்படிப் பல்வேறு பரிணாம வளர்ச்சிகளைப் பெற்று வளர்ந்துவரும் தமிழ்மொழியில், மொழி வளர்ச்சிக்குத் தனித்த பங்களிப்பைச் செய்வது “சொல்லாக்கம்” என்ற துறையாகும்.

தமிழில் சொல்லாக்கம் இருவகைப் பிரிவுகளை உடையது. அவை சொல்லாக்கம், கலைச்சொல்லாக்கம் என்பன. துறைகள்தோறும் சொற்கள் ஆக்கப்படுவதைக் கலைச்சொல்லாக்கம் என்றும் பொதுநிலையில் நிகழ்வதைச் சொல்லாக்கம் என்றும் பாகுபடுத்துவர் சொல்லாக்கச் சிந்தனையாளர்கள். ஆனால் ***‘எல்லாச் சொற்களும் ஏதேனும் ஒரு துறை சார்ந்தே ஆக்கம் பெறுகின்றன. எனவே, சொல்லாக்கமும் கலைச் சொல்லாக்கமும் ஒன்றே’*** (2007:74) என்ற சீதாலட்சுமியின் கருத்து ஏற்றுக்கொள்ளும் தன்மை உடைத்தே. எனவே, சொல்லாக்கம் என்ற பொது நிலையில் நின்று மணிமேகலையில் நிகழ்ந்துள்ள சொல்லாக்கங்களை ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

புதிய அவையம்

**சொல்லாக்கம் வரையறை**

சொல்லாக்கத்திற்கு அறிஞர்கள் பலர் வரையறைகள் கூறியுள்ளனர். அவற்றில் பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சிலரது கருத்துக்கள் கட்டுரையின் தெளிவுகருதி காண்பது அவசியமாகிறது.

சொல்லாக்கம் என்பது ***இரு சொற்களின் சேர்க்கையாலோ அல்லது சொற்கள் விகாரப்பட்டோ, வினையடிகள் தாமாக நின்று அல்லது நீட்டல் முதலிய விகாரங்கள் பெற்றுப் புதிய விகுதிகள் சேர்க்கப்பெற்றோ சொற்கள் ஆக்கம் பெறுகின்றன*** *(1983:217)* என்று எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகின்றார். அதேபோல், ***ஆக்கவொட்டுக்கள் பொதுவாக அடிச்சொற்களுடன்(Stem) இணைந்து வேறு வகையான சொற்கள் உருவாகும். இத்தகைய மாற்றங்களையே ஆக்கப்பாடு (Derivation) எனக் கூறுவர். ஒருவகைச் சொல்லிலிருந்து இன்னொரு வகைச் சொல்லை உருவாக்கும் மாற்றத்தையே இப்பெயரால் அழைக்கின்றனர்*** *(1983:10)* என்று ச. அகத்தியலிங்கம் வரையறுத்துக் கூறுகின்றார்.

**சொல்லாக்கத்தின் வகைகள்**

சொல்லாக்கம் பல நிலைகளில் நடைபெற்றாலும், சில வகைச் சொல்லாக்க முறைகளே அதிக விளைவாக்கம் பெற்றவையாகக் காணப்படுகின்றன. அவை, கூட்டுச்சொல்லாக்கம், ஒட்டாக்கம், கடனாக்கம் ஆகிய மூன்று வகைகளாகும். இதில் ஒட்டாக்கம் முன்னொட்டாக்கம், பின்னொட்டாக்காம் (விகுதிவழிச் சொல்லாக்கம்) என்ற இரு பிரிவுகளை உடையது. சொல்லாக்க வகைமைகளை இலக்கியங்களில் ஒப்பிட்டு ஆய்வு செய்யும் இந்த மூன்று வகைகள் மட்டும் அதிக விளைவாக்கம் கொண்டதாகவும் பிற சொல்லாக்க வகைமைகள் குறைந்த அளவிலும் காணப்படுவதை அறியமுடிகின்றது.

இந்தச் சொல்லாக்க வரையறைகளையும் வகைப்பாடுகளையும் மணிமேகலையில் உள்ள சொற்களைத் தொகுத்து ஒப்பு நோக்கிப் பார்க்கும் பொழுது, கூட்டுச்சொல்லாக்கம், முன்னொட்டாக்கம், பின்னொட்டாக்கம், கடனாக்கம், தமிழ்ப்படுத்தம் ஆகிய முறைகளில் சொல்லாக்கம் நிகழ்ந்துள்ளதைக் காணமுடிகின்றது. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காணலாம்.

பதிப்பு ஒளவையம்

**கூட்டுச் சொல்லாக்கம்**

இலக்கணங்களில் காணப்படும் தொகைச்சொற்களை இந்த வகைக்கு முன்னோடியாகக் கொள்ளலாம். சொல்லாக்கச் சிந்தனையில் ஈடுபட்ட இ. மறைமலை இதைத் தொகைச் சொல்லாக்கம் என்றே குறிப்பிடுகின்றார். பெயருடன் பெயரும், பெயருடன் வினையும், பெயரடையுடன் பெயரும், வினையடியுடன் பெயரும் சேர்ந்து சொற்கள் ஆக்கம் பெறுவதைக் கூட்டுச்சொல்லாக்கம் என்று கூறுவர். அந்த அடிப்படையில் மணிமேகலையில் உள்ள சொற்களைத் தொகுத்து நோக்கும் பொழுது,

பெயர்+பெயர் > பெயர்

பெயரடை+பெயர் > பெயர்

பெயர்+பெயர்+விகுதி > பெயர்

பெயர்+வினை+பெயர் > பெயர்

வினை+பெயர் > பெயர்

ஆகிய ஐந்து வாய்ப்பாட்டு அடிப்படைகளில் கூட்டுச் சொல்லாக்கம் நிகழ்ந்துள்ளதைக் காணமுடிகின்றது.

**பெயர்+பெயர் > பெயர்**

பெயர்+பெயர் > பெயர் வாய்பாட்டு அமைப்பில் சொல்லாக்கம் நிகழ்வது அதிக விளைவாக்கம் கொண்டதாகும். மணிமேகலையில் அவ்வாய்ப்பாட்டில் சொற்கள் ஆக்கம் பெற்றுள்ளதைச் சான்று நோக்கில் பார்க்கலாம்.

தேவர்+குலம் > தேவக்குலம்(கோயில்) (மணி. 26:72)

நா+பண் > நாப்பண் (நடுவண்) (மணி. 22:145)

கலை+நியமம் > கலைநியமம் (நாமகள் கோயில்) (மணி. 14:10)

காலம்+கணதர் > காலக்கணிதர் (சோதிடர்) (மணி. 28:40)

கை+தூண் > கைத்தூண் (வாழ்க்கை) (மணி. 18:16)

கை+மலை > கைமலை (யானை) (மணி. 26:81)

செரு+வேல் > செருவேல் (வேற்படை) (மணி. 19:124)

இசை+சொல் > இசைச்சொல் (புகழ்) (மணி. 11:81)

வெள்ளை+மகன் > வெள்ளைமகன் (வஞ்சமற்றவன்) (மணி. 14:36)

அட்டில்+சாலை > அட்டிற்சாலை (சமையல் அறை) (மணி. 20:7)

எட்டி+பூ > எட்டிப்பூ (வணிகர் பெறும் பட்டம்) (மணி. 22:113)

**பெயரடை+பெயர் > பெயர்**

பெயரடை+பெயர் > பெயர் வாய்ப்பாட்டு அமைப்பு முறையில் சொல்லாக்கம் மிகக்குறைவாக நிகழ்ந்துள்ளதை மணிமேகலையில் காணமுடிகிறது.

மா+நீர் > மாநீர் (கடல்) (மணி. 14:73)

என்ற ஒரு சொல் மட்டும் ஆக்கம் பெற்றுள்ளது.

**பெயர்+பெயர்+விகுதி > பெயர்**

பெயர்+பெயர்+விகுதி>பெயர் வாய்ப்பாட்டு அமைப்பில் ‘வானவாழ்க்கையர்’ என்ற ஒரு சொல் மட்டும் ஆக்கம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

வானம்+வாழ்க்கை+அர் > வானவாழ்க்கையர் (தேவர்) (மணி. 20:34)

**பெயர்+வினை+பெயர் > பெயர்**

இரு பெயர்ச்சொற்களுக்கு இடையில் ஒரு வினையடி சேர்ந்து சொற்கள் ஆக்கம் பெறுவதுண்டு. இந்த அமைப்பில் ‘ஆலமர்ச்செல்வன்’ என்ற சொல் சிவன் என்னும் பொருள் தரும் சொல்லாக ஆக்கம் பெற்றுள்ளது.

ஆல்+அமர்+செல்வன் > ஆலமர்ச்செல்வன் (சிவன்) (மணி. 3:144)

மேற்காணும் சொல்லாக்கங்களைத் தொகுத்து நோக்கும் பொழுது மணிமேகலையில் இருசொல் கூட்டு, முச்சொல் கூட்டு என்ற அமைப்பில் பெயர்ச்சொல்லாக்கம் மட்டுமே நடைபெற்றுள்ளது. வினைச்சொல்லாக்கம் நடைபெறவில்லை.

**முன்னொட்டாக்கம்**

சொற்களில் குறிப்பாகப் பெயர்ச்சொற்களின் முன்னால் ஒட்டுக்களை இணைத்துப் புதிய சொற்களை ஆக்கும் முறையே முன்னொட்டாக்கம் எனப்படும். பெரும்பாலும் ஆங்கிலம், வடமொழி போன்ற மொழிகளில் முன்னொட்டுக்களின் பயன்பாடு அதிகமாக உள்ளது. ஆனால், தமிழில் வடமொழிக் கலப்பால் சிறிய அளவில் மட்டுமே முன்னொட்டாக்கம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அடிப்படையில் மணிமேகலையில்,

*அ+நித்தம் > அநித்தம் (நிலையற்றது) (மணி. 25:3)*

*அ+சரீரி > அசரீரி (உடல் அற்றது) (மணி. 16:44)*

என்ற இரு சொற்கள் மட்டும் ஆக்கம் பெற்றுள்ளன.

**பின்னொட்டாக்கம் (விகுதிவழிச் சொல்லாக்கம்)**

சொல்லாக்கத்தில் அதிக விளைவாக்கம் கொண்ட வகையாக விகுதிகளைப் பயன்படுத்தி சொற்களை ஆக்குதல் என்னும் பின்னொட்டாக்கம் விளங்குகின்றது. இவ்வகை ஆக்கத்தில் பெயரடி, வினையடிகளுடன் விகுதிகள் சேர்ந்து சொற்கள் ஆக்கம் பெறுகின்றன. இவற்றின் அடிப்படையில் சொல்லாக்கச் சிந்தனையில் ஈடுபட்ட ச. அகத்தியலிங்கம் ஆக்கப் பெயர் விகுதிகளாக அருவத்தை, 'அகம், அம், அல், அவு, இ, உள், ஐ, கை, க்கை, சி, ச்சில், ச்சி, தி, பு, ப்பு, ம், மை, வை, வல், வி, வு, அர், அரை, ஆர், காடு, ட்டம், ட்டு, டு, டை, ப்பை, வாய் ஆகிய 33 விகுதிகள் பழந்தமிழ் இலக்கியங்களில் ஆக்க ஒட்டுக்களாக இடம்பெற்றுள்ளன, என்று குறிப்பிடுகின்றார் (1983:145-148). இவற்றின் அடிப்படையில் மணிமேகலையில் நிகழ்ந்துள்ள விகுதிவழிச் சொல்லாக்கங்களைத் தொகுத்து ஆராய்கையில், அகம், அம், அன், அர், இயல், ஐ, ஓர், கு, கை, ஞர், நர், மை, வு, வை ஆகிய 14 விகுதிகள் சொல்லாக்க விகுதிகளாக இடம்பெற்றுள்ளன.

**அகம் விகுதி**

அகம் என்பது ஒரு முழுச்சொல். ஆனால் சொல்லாக்கத்தில் விகுதியாகச் செயல்பட்டுச் சொற்களை ஆக்கப் பயன்படுகிறது. இதைச் சொல் என்று கொள்ளாமல் விகுதி என்று ஏன் கருதவேண்டும் என்ற வினாவை முன்வைத்த இ. மறைமலை அவர்கள், அதற்கு, ***''இவை மீண்டும் மீண்டும் விகுதிகளைப் போலவே செயல்பட்டுப் பல சொற்களை உருவாக்கத் துணைபுரிகின்றன"*** (2001:61) என்று விளக்கமளிக்கின்றார். அதன் அடிப்படையில் மணிமேகலையில் உள்ளச் சொற்களைத் தொகுத்து ஆராயும்பொழுது,

*அமர் + அகம் > அமரகம் (போர்க்களம்) (மணி. 5:137)*

*அலத்தம் + அகம் > அலத்தகம் (செம்பஞ்சு குழம்பு) (மணி. 6:110)*

*நாடு + அகம் > நாடகம் (கதை தழுவிய கூத்து) (மணி. 19:80)*

*பதி + அகம் > பதியகம் (நகரிடம்) (மணி. 19:41)*

*பாடு + அகம் > பாடகம் (காலணி) (மணி. 25:85)*

*பார் + அகம் > பாரகம் (உலகம்) (மணி. 16:134)*

இச்சொற்களில் அமரகம், பதிப்பகம், பாரகம் ஆகிய இடங்களில் இடப்பொருள் தருவதாக அகம் இடம்பெற்றுள்ளது. ஆனால் அலத்தம், நாடகம், பாடகம் ஆகிய சொற்களில் பொருள் மாற்றம் தரும் தன்மையில் ஆக்கப் பெயர் விகுதியாக இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அம் விகுதி**

அம் விகுதி இரு நிலைகளில் சொல்லாக்கத்தில் இடம்பெறுகின்றது. பொருள் மாற்றம் கொண்டும், பொருள் மாற்றம் இன்றியும், பயன்பட்டு வருவதை மணிமேகலையில் காணமுடிகிறது.

**பொருள் மாற்றம் தரும் நிலை**

*அகல் + அம் > அகலம் (மார்பு) (மணி. 8:24)*

*இயக்கு+ அம் > இயக்கம் (செல்லுதல்) (மணி. 25:8)*

*சேதி + அம் > சேதியம் (கோயில்) (மணி. 28:175)*

**பொருள் மாற்றம் இல்லா நிலை**

*மன்று + அம் > மன்றம் (உலகறவி என்றும் அம்பலம்) (மணி. 19:31)*

*முழவு+ அம் > முழவம் (மத்தளம்) (மணி. 6:119)*

*சங்கு + அம் > சங்கம் (சங்கு) (மணி. 7:113)*

மேற்காணும் இருநிலைகளில் "அம்" விகுதி பயின்று வந்துள்ளது.

**அன் விகுதி**

பெயராக்க விகுதியாக "அன்" இரண்டு இடங்களில் பயின்று வந்துள்ளதை மணிமேகலையில் காணமுடிகிறது. அதாவது மடை, காவல் ஆகிய பெயர்ச்சொற்களுடன் சேர்ந்து மடையன், காவலன் ஆகிய சொற்கள் ஆக்கம் பெற்றுள்ளன.

*மடை + அன் > மடையன் ( சமையல்காரன்) (மணி. 21:56)*

*காவல் + அன் > காவலன் (வேந்தன்) (மணி. 12:49)*

இந்த இருசொற்களும் சமையல், காத்தல் ஆகிய பொருளை விடுத்து முறையே சமையல்காரன், வேந்தன் ஆகிய பொருளைத் தந்து நிற்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**அர் விகுதி**

இலக்கய நிலையில் "அர்" என்பது பலர்பால் விகுதியாகப் பயன்பட்டாலும் இலக்கியங்களில் சில இடங்களில் ஆக்கப் பெயர் விகுதியாகச் செயல்படுவதையும் அறியமுடிகிறது. அதனடிப்படையில் மணிமேலையில் "பொதுமகளிர்" என்னும் பொருளில் "பொதுவீர்" என்ற சொல் ஆக்கம் பெற்றுள்ளது.

*பொது + அர் > பொதுவர் (கணிகையர்) (மணி. 28:51)*

**இயல் விகுதி**

தற்காலத்தில் துறைகள் தோறும் "இயல்" என்ற விகுதியைச் சேர்த்து சொற்கள் ஆக்கப்படுகின்றன. அதாவது தத்துவவியல், கணினியியல், வேதியியல், தாவரவியல் போன்ற சொற்கள் ஆக்கப்படுவதில் அதிக விளைவாக்கம உடையது. ஆனால், சங்ககாலத்தில் குறைந்த அளவிலே பயன்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

*பொது + இயல் > பொதுவியல் (மக்களுக்கு ஆடும் கூத்து) (மணி. 2:18)*

*வேத்து + இயல் > வேத்தியல் (அரசர்களுக்கு ஆடும் கூத்து) (மணி. 2:18)*

சங்க இலக்கியங்களின் தொடர்ச்சியாக மணிமேகலையிலும் மேற்காணும் இரு சொற்களில் "இயல்" விகுதி சொல்லாக்கத்தில் பயின்றுள்ளதை அறியலாம்.

**ஐ விகுதி**

மணிமேகலையில் ஐ விகுதி ஓர் இடத்தில் மட்டும் பயின்று சொல்லாக்கத்தை நிகழ்த்தியுள்ளது. கொல் என்ற சொல்லுடன் சேர்ந்து அசோகமரம் என்ற பொருளில் "செயலை" என்னும் சொல் ஆக்கம் பெற்றுள்ளது.

*செயல் + ஐ > செயலை (அசோக மரம்) (மணி. 24:38)*

**ஓர் விகுதி**

விளைவாக்கம் அற்ற விகுதியாக ஓர் சொல்லாக்கத்தில் பயன்படுகிறது. மணிமேகலையிலும் ஓரிடத்தில் மட்டுமே பயின்று வந்துள்ளது.

*மதி + ஓர் > மதியோர் (அறிஞர்) (மணி. 20:14)*

பதிப்பு இணையம்

**கு / கை விகுதிகள்**

கு / கை விகுதிகள் முறையே ஓரிடத்தில் மட்டும் பயின்று வந்து சொல்லாக்கம் நிகழ்ந்துள்ளதை மணிமேலையில் காணமுடிகிறது.

*எண் + கு > எண்கு (கரடி) (மணி. 16:68)*

*போதி + கை > போதிகை (தூண்) (மணி. 19:111)*

**ஞர் விகுதி**

ஞர் விகுதி மணிமேகலையில் ஓரிடத்தில் மட்டும் வினை என்ற சொல்லுடன் சேர்ந்து சொல்லாக்கத்தை நிகழ்த்தியுள்ளது.

*வினை + ஞர் > வினைஞர் (மணி செய்பவர்) (மணி. 28:45)*

**நர் விகுதி**

சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரை 'நர்' விகுதியின் துணைகொண்டு சொற்களை ஆக்கிப் பயன்படுத்துதல் என்பது வினைவாக்கம் உடைய ஒன்றாகும். தற்காலத்தில் ஓட்டுநர், நடத்துநர், இயக்குநர், ஆளுநர் போன்ற சொற்கள் ஆக்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன என்பது நாம் அறிந்த ஒன்றே. இந்த அடிப்படையில் மணிமேகலையில் உள்ள சொற்களைத் தொகுத்து ஆராயும்போது,

*தகைக்கு + நர் > தகைக்குநர் (தடுப்பவர்) (மணி. 23:36)*

*நிரப்பு + நர் > நிரப்புநர் (கொடுப்போர்) (மணி. 23:133)*

*ஆற்று + நர் > ஆற்றுநர் (பொறுத்துக் கொள்வோர்) (மணி. 11:92)*

ஆகிய மூன்று சொற்கள் ஆக்கம் பெற்றுள்ளன. குறிப்பாக நர் விகுதி வினையடிகளுடன் மட்டுமே சேர்ந்து சொல்லாக்கத்தில் பயின்று வருவதை சங்க இலக்கியங்கள் தொடங்கிப் பார்க்க முடிகின்றது.

**மை விகுதி**

மை விகுதி மணிமேகலையில் ஓரிடத்தில் மட்டும் பயின்று வந்துள்ளது.

*நரை + மை > நரைமை (வெண்மை) (மணி. 20:44)*

பதிப்பு ஐவையம்

நரைமுடியின் வெண்மைத் தன்மையை வெளிப்படுத்த மை விகுதி சேர்ந்து சொல் ஆக்கம் செய்யப்பட்டுள்ளது.

**வு / வை விகுதிகள்**

வு / வை விகுதிகளும் சொல்லாக்கத்தில் விளைவாக்கம் குறைந்து காணப்படும் விகுதிகளாகும். இருப்பினும் மணிமேகலையில் இரு விகுதிகளும் முறையே ஓரிடத்தில் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

*பரி + வு > பரிவு (இரக்கம்) (மணி. 15:66)*

*அகம் + வை > அகவை (உள்ளிடம்) (மணி. 12:99)*

**கடனாக்கம்**

ஒரு மொழியில் சொல் வளத்தின் தேவை ஏற்படுகின்ற பொழுது பிறமொழிச் சொற்களைக் கடனாகப் பெற்று பயன்படுத்தலும் உண்டு. ஆனால், கடன்பெறும் சொற்களை எம்மொழியில் பயன்படுத்துகிறோமோ அம்மொழியின் இலக்கண வரம்பிற்கு உட்பட்டு பயன்படுத்த வேண்டும். (அதாவது தமிழில் பயன்படுத்தும்போது தமிழ் மொழியின் அமைப்பிற்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும்). சொல்லாக்க நெறிமுறைகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாக இந்த கடனாக்கமும் விளங்குகிறது. இந்தச் சொல்லாக்க நெறிமுறையின் அடிப்படையில் மணிமேகலையை ஆராயும் பொழுது அதிகமாக வடமொழிச் சொற்களே கடனாகப் பெற்றுப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. சீத்தலைச் சாத்தனார் வடசொற்கள் அதிகமாகப் பயன்படுத்தியமைக்கு இரு காரணங்களைக் கூறலாம். ஒன்று சொற்களின் தேவை கருதிப் பயன்படுத்தி இருக்கலாம். மற்றொரு காரணமாக மணிமேகலை எழுதப்பட்ட காலச் சூழல். ஏனெனில் அக்கலாச் சூழலில் இருமொழிப் புலமைச் செருக்கு புலவர்களிடையே காணப்பட்டது. அதன் அடிப்படையிலும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வடமொழிச் சொற்கள் தமிழில் வழங்கும் போது பெரும்பான்மைச் சொற்கள் இறுதியில் மகர ஒற்று சேர்ந்து வந்துள்ளதை அறியலாம்.

| **வ.எண்** | **வடமொழி** | **தமிழ்** | **பொருள்** |
|---|---|---|---|

பதிப்பு இலவயம்

| | | | |
|---|---|---|---|
| *1* | அஞ்சன | அஞ்சனம் | மை *(மணி. 18:161)* |
| *2* | அந்தர | அந்தரம் | வானம் *(மணி. 20:108)* |
| *3* | அவல | அவலம் | துன்பம் *(மணி. 21:94)* |
| *4* | அபிநய | அவிநயம் | கூத்துஅடவு *(மணி. 19:79)* |
| *5* | அற்புதா | அற்புதம் | வியப்பு *(மணி. 7:95)* |
| *6* | ஆகமா | ஆகமம் | நூல்*(மணி. 29:164)* |
| *7* | ஆசனா | ஆசனம் | இருக்கை *(மணி. 29:295)* |
| *8* | ஆரண்யஹ | ஆரணம் | வேதம் *(மணி. 13:4)* |
| *9* | உபஸ்தஹ | உபத்தம் | பெண் ஆண் உறுப்பு *(மணி. 27:237)* |
| *10* | சைத்ய | சேதியம் | கோயில் *(மணி. 28:175)* |
| *11* | தீவிபஹ | தீவகம் | தீவு *(மணி. 21:87)* |
| *12* | நகுல | நகுலம் | கீரி *(மணி. 19:96)* |
| *13* | மண்டல | மண்டிலம் | கண்ணாடி *(மணி. 25:137)* |
| *14* | யோக | யோகம் | தவம் *(மணி. 3:100)* |

**தமிழ்ப்படுத்தம்**

சொல்லாக்க உத்திகளில் பரவலாகப் பயன்படும் ஓர் உத்தி இதுவாகும். இது இனமாற்றம், வடிவமாற்றம் இருவகைப்படும். இதில் இனமாற்றம் என்ற அடிப்படையிலேயே மணிமேலையில் சொல்லாக்கம் நிகழ்ந்துள்ளது.

| **வ.எண்** | **வடமொழி** | **தமிழ்** | **பொருள்** |
|---|---|---|---|
| *1* | சலம் | சலம் | நீர் *(மணி. 24:47)* |

| | | | |
|---|---|---|---|
| *2* | விஷேஶம் | விசேடம் | சிறப்பு *(மணி. 27:243)* |
| *3* | ஹரமியஹ | அரமியம் | நிலாமுற்றம் *(மணி. 12:67)* |

இச்சொற்களில் வடமொழி எழுத்துக்களுக்கு இணையான தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தி வடசொற்களைத் தமிழில் பயன்படுத்தியுள்ளதை அறியமுடிகின்றது.

மணிமேகலையில் பழந்தமிழ் விகுதிகளைப் பயன்படுத்தி விகுதிவழிச் சொல்லாக்கம் அதிகமாக நிகழ்ந்துள்ளதைக் காணமுடிகிறது. மொழிப்புலமை கருதியும் இலக்கிய இரசனை கருதியும் பிறமொழிச் சொற்களை எடுத்தாளுதல்(கடனாக்கம்) என்ற அடிப்படையில் சொல்லாக்கம் அதிகமாக நிகழ்ந்துள்ளது. இவற்றால் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலை காப்பியத்தை இயற்றியதன் வழி தமிழ்மொழியின் சொல்வளத்தை மேம்படுத்தும் நோக்கோடு பல புதிய சொல்வடிவங்களை உருவாக்கிப் பயன்படுத்தியுள்ளார். இது தமிழ் மொழியின் வளத்தை மேலும் செழுமைப்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**துணைநூற் பட்டியல்**


1. சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை, கழக வெளியீடு, 1994.
2. ச.அகத்தியலிங்கம், மொழியியல், சொல்லியல், பெயரியல், அனைத்திந்திய தமிழ்மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், 1983.
3. இ. மறைமலை, சொல்லாக்கம், தமிழ்மதிப் பதிப்பகம், தஞ்சை, 2001.
4. சீதாலட்சுமி, சிங்கப்பூர் மக்கள் தொடர்புச் சாதனங்கள், தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு, முனைவர் பட்ட ஆய்வேடு, தேசிய கல்வியியல் நிறுவனம், சிங்கப்பூர், 2007.
5. தமிழின் மறுமலர்ச்சி நூற்களஞ்சியம் – தொகுதி 2, நூற்றாண்டு நினைவு வெளியீடு, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை, 1989.
6. தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1982.